முருகப்பெருமான் துணை

**மகான் காசிபர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.01.2024**, செவ்வாய்கிழமை

1. ஆறுமுகனார் அருளாசி கொண்ட
அவதார ஞான வடிவாக வந்த
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது கலை திங்கள்
குறைவிலா உபய திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 02 ம் நாள், 16.01.2024, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி தனை
தேசிகன் கேட்க காசிபர் யானும்
3. யானும் உலக உயிர்கள் பாதுகாப்புற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி வாழுகின்ற
ஞானமருளி எவ்வுயிரும் தம்முயிர்போல்
ஞாலமதில் போற்றிவாழ அருளுகின்ற
4. அருளுகின்ற அரங்கமகான் நெறி
அகிலத்தில் உயர்ந்த நெறி
வரமென பின்பற்றி உலகமக்கள்
வணங்கி மாட்டுப்பொங்கல் இதுநாளில்
5. நாளதனில் எல்லா உயிர்களையும்
நாட்டிடுவேன் வணங்கி பூஜித்து
காலமெல்லாம் சைவ நெறி ஏற்று
கண்டுரைப்பேன் கடைபிடித்துவர
6. வருகவே வருங்காலம் சமூகம்
வள்ளல் தன்மை நிரம்பியே
தரும குணமும் தனித்தன்மையும்
தன்னார்வத் தொண்டும் பெருகி

7. பெருகியே இந்தப் பேருலகில்
பிரபஞ்சமே வியக்க அரங்கமகான்
முருகப் பெருமானின் அவதாரமேயென
மொழிகுவேன் அறியப்பட்டு மாற்றம்

8. மாற்றம் மண்ணுலகம் தானும்
மனிதர்கள் சிந்தை கடந்து
ஆற்றல்மிக்க ஞானவான்கள் கூடும்
அவையாக ஞான சபையாகமாறி

9. மாறியே மனிதர்கள் ஆட்சி முடிவுற்று
மகான்கள் நிரம்பிய வண்ணம்
பேருலகில் ஞான ஆட்சி மலரும்
புண்ணிய சேவை கொண்டு அரங்கனால்

10. அரங்கனால் அற்புதம் நிகழும்
ஆற்றல் மிக்க பிரணவக்குடிலில்
வரங்கள் சக்தியாக மிகுந்திருக்க
வணங்கிவர உலக மக்களுக்கு

11. மக்களுக்கு சகல வகை நன்மைகளும்
மாண்புடன் வசமாகி திருவருளும்
தேக்கமின்றி சித்தி கண்டு மாற்றம்
தெயவ்பலமாகத் துணைவரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–